# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව - 2013
# வருடாந்த செயல்திறன்அறிக்கை - 2013
# Annual Performance Report - 2013

**ஓய்வூதியத் திணைக்களம்**

**தலைமுறையொன்றின் பெருமிதம்**

## நோக்கம்:

பொருளாதார மற்றும் சமூகவியல் ரீதியில் திருப்திகரமானதோர் ஓய்வூதியர் சமூகத்தினை உருவாக்குதல்.

## கடமை:

அரச சேவைக்காகத் தோள் கொடுத்த அதிகாரிகளின் சேவை முடிவு அனுகூலங்களை உறுதிப்படுத்துவதன் மூலம் அவர்களின் ஓய்வின் பின்னரான வாழ்வு நிலையினை மேம்படுத்தல் மற்றும் அதனைக் கொண்டு நடாத்தத் தேவையான உயிரோட்டமுள்ள பங்களிப்பினை நிதமும் பெற்றுக்கொடுத்தல்.

# தலைமுறையொன்றின் பெருமிதம்

# பொருளடக்கம்

**தொடரிலக்கம்விடயம்பக்க இலக்கம்**


| | | |
|---|---|---|
| 01 | திணைக்களம் பற்றிய விவரணம் | 04 |
| 02 | திணைக்களத் தலைவர்கள் | 05 |
| 03 | திணைக்களம் பற்றிச் சுருக்கமாக | 06 |
| 04 | மக்கள் தொடர்பாடல் பிரிவு | 08 |
| 05 | பதிவு செய்தற் பிரிவு | 9-10 |
| 06 | தகவல் தொழில்நுட்பப் பிரிவு | 11 |
| 07 | ஆயுதப்படைச் சேவைகள் பிரிவு | 11-12 |
| 08 | நிர்வாக மற்றும் மனித வள முகாமைத்துவப் பிரிவு | 13 |
| 09 | வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவு | 13-15 |
| 10 | விதவைகள் அனாதைகள் ஓய்வூதியப் பிரிவு | 15-18 |
| 11 | கொள்கைகள் பிரிவு | 18-19 |
| 12 | சட்டப் பிரிவு | 19 |
| 13 | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 20-21 |
| 14 | அரச சேவைகள் சேமலாப நிதியம் | 21-24 |
| 15 | கணக்குப் பிரிவு | 25-28 |
| 16 | ஊடகப் பிரிவு | 29 |
| 17 | சிரேஷ்ட பிரஜைகளுக்கான உபகாரம் | 30-31 |

# திணைக்களம் பற்றிய விவரணம்........

பொதுத் திறைசேரியின் மேலதிகத் தாபனக் கட்டுப்பாட்டாளரொருவரின் கீழ் நிர்வகிக்கப்பட்ட ஒய்வூதியப் பிரிவு, நிதியமைச்சின் கீழ் உப திணைக்களமொன்றாகக் காணப்பட்ட விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய அலுவலகம், திறைசேரிப் பிரதிப் பணிப்பாளரின் பங்களிப்புடன் செயற்படுத்தப்பட்ட அரச சேவைகள் சேமலாப நிதியம் எனும் ஒரே துறையிலான விடயங்களை ஒரே நிறுவனத்தில் நிலைப்படுத்திய வண்ணம் 23-12-1970 ஆந் திகதி அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் “ஏ” தரத்திலானதோர் திணைக்களமாக **ஓய்வூதியத் திணைக்களம்** நிறுவப்பட்டது. அதன்படி குறித்த அமைச்சின் கீழ் 05-05-1970 ஆந் திகதி ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு மீளாய்வு செய்யப்பட்டதுடன், அன்று தொடக்கம் இற்றை வரை அரச நிர்வாக அமைச்சு மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் சுற்றுநிருபங்களின் பிரகாரம் ஓய்வூதிய வழங்கற் செயற்பாடு ஒழுங்கமைக்கப்படுகின்றது.

அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னரன்றி அரச சேவையில் ஈடுபட்டிருக்கையிலேயே அரச அலுவலரினதும், அவரது துணைவரினதும் அரச மட்டத்திலான ஒரேயொரு சமூக பாதுகாப்பு முறைமையான ஓய்வூதியம், புதிய இலக்குகளுடன் முன்னோக்கிச் செல்லும் சமூகத்தின் அனைத்து அங்கங்களுடனும் ஒருங்கிணைந்த வண்ணம் அரச அலுவலரின் நியாயமான எதிர்பார்ப்புக்களுடன் ஒருங்கிசையும் வண்ணம் நிதமும் சீரமைக்கப்பட வேண்டியுள்ளது.

தனியே ஓய்வூதிய வழங்கல்களிற்கு அப்பாற் சென்று, தாபனக் கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களையும் மீறாத வண்ணம் சம்பிரதாயபூர்வமான அரச சேவையினை மிக உயர்ந்ததோர் நிலைக்குக் கொண்டு செல்லும் பாரியதோர் கடப்பாடு திணைக்களத்தினைச் சார்ந்துள்ளது. சேவைதாரியிடத்தே சென்று சுகநலன்களை விசாரிக்கும் மற்றும் அவர்களிடத்தே உணர்வுபூர்வமான மற்றும் மனிதாபிமான ரீதியிலான பார்வையினைச் செழுத்துவதன் மூலமும் மீளவும் அவர்களைப் பொருளாதார ரீதியில் வலுவானதோர் நிலைக்குக் கொண்டு செல்லுதல் திணைக்களத்திடம் காணப்படும் பொறுப்பாகும். அதன்படி நவீனத்துவத்துடன் ஒருங்கிசையும் தர்க்கரீதியான கொடுப்பனவு முறைகளைப் போன்றே மாறுபடும் எதிர்பார்ப்புக்களுடன் ஒருங்கிசையும் மாற்று வழிமுறைகளை முன் வைத்தலும், அதற்கப்பால் சென்று அந் நபர்களுக்குரித்தான திறமைகளை இனம் கண்டு அவ் ஒவ்வொரு நபரும் வெவ்வேறாகக் கருத்திற் கொள்ளப்படுமோர் புதிய சமூக பாதுகாப்பு மற்றும் பொருளாதார வேலைத் திட்டமொன்றினை நோக்கி நகர்வதானது எம் எதிரில் காணப்படும் பாரியதோர் சவாலாகும்.

# திணைக்களத் தலைவர்கள் (31-12-2013 ஆந் திகதியில்)

ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் - எஸ்.எஸ். ஹெட்டியாரச்சி
ஓய்வூதியப் பணிப்பாளர் - கே.ஏ. சுபத்ரா வல்பொல
ஓய்வூதியப் பணிப்பாளர் - ஏ.பீ.எம். அஷ்ரப்
ஓய்வூதியப் பணிப்பாளர் - கே.ஏ.எஸ். மஹேஷிக்கா

**மக்கள் தொடர்பாடல் பிரிவு**

எம்.ஜீ.சீ.எஸ். றணசிங்க – உதவிப் பணிப்பாளர்

**பதிவு செய்தற் பிரிவு**

எச்.ஜீ.டீ.எஸ். பிரியர்ஷனி - உதவிப் பணிப்பாளர்

**தகவல் தொழில்னுட்பப் பிரிவு**

எம்.ஜீ.சீ.எஸ். றணசிங்க – உதவிப் பணிப்பாளர்

**ஆயுதப்படைச் சேவைகள் ஓய்வூதியப் பிரிவு**

பீ.சீ. தெனகம- உதவிப் பணிப்பாளர்

**விதவைகள் அனாதைகள் ஓய்வூதியப் பிரிவு**

எச்.ஏ.பீ.கே. ஐராங்கனீ - உதவிப் பணிப்பாளர்
கே.எம்.ஜீ.ஏ. கருணாரத்ன - உதவிப் பணிப்பாளர்

**கொள்கைகள் மற்றும் திட்டமிடல் பிரிவு**

எல்.ஏ.ஏ.ஏ. சஷீ விராஜினி- உதவிப் பணிப்பாளர்

**வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவு**

ஆர்.எம்.கே.ஜீ. சன்ஜீவனி - உதவிப் பணிப்பாளர்

**அரச சேவைகள் சேமலாப நிதியப் பிரிவு**

எஸ்.என். ஹப்புஆராச்சி – செயலாளர் மற்றும் கணக்காளர்
எஸ்.எம்.டீ.டி. சமரதுங்க- கணக்காளர்

**கணக்குப் பிரிவு**

கே.வீ. திசாநாயக்க - பிரதம கணக்காளர்
பீ.எஸ். ஹெட்டிகே - பிரதிப் பிரதம கணக்காளர்
டி.எம்.எம். மானெல் - கணக்காளர்
டீ.டி. கம்முடுவத்தகே - கணக்காளர்

# திணைக்களம் பற்றிச் சுருக்கமாக.........

தெற்காசிய வலய நாடுகளிடையே ஒப்பிடுகையில் அண்ணளவாக அதிக ஆயுள் எதிர்பார்ப்புடைய மக்கள் வாழ்கின்றனர். அவ்வாறே ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் வயது 60 வருடங்களிலும் கூடிய அதிக சனத்தொகையினர் வாழ்கின்ற நாடெனும் வகையிலும் தொழிலாளர் படையணியின் குறிப்பிடத்தக்கதோர் உயர் சதவீதம் ஓய்வூதியப் காப்பினைப் பெறுகின்ற குழுவினர் வாழ்கின்றதோர் நாடெனும் வகையிலும் இலங்கை ஏனைய வலய நாடுகளுடன் ஒப்பிடுகையில் சமூக பாதுகாப்பு எனும் விடயத்தில் மிக உயர்ந்த நிலையில் உள்ளதென்பதனை ஆசிய அபிவிருத்தி வங்கி அறிக்கைளினது தரவுகளைப் பகுப்பாய்வு செய்கையில் தெரிந்து கொள்ள முடியும்.


இந்நாட்டின் தற்போதைய முதற்தர சமூக பாதுகாப்பு வேலைத் திட்டமான இலங்கை ஓய்வூதியத் திட்டத்தின் நலன்களைப் பிரதானமாக இரண்டு பகுதிகளாக வகைப்படுத்தி விபரிக்க முடியும். அதாவது ஒரு முறை மட்டும் கிடைக்கப் பெறும் அனுகூலங்கள் மற்றும் மாதாந்தம் கிடைக்கப் பெறும் அனுகூலங்கள் எனும் வகையிலாகும். அங்கு ஒரு முறை மட்டும் கிடைக்கப்பெறும் நலன்களிடையே ஓய்வூதியரின் குறைக்கப்படாத மாதாந்த ஓய்வூதியத்தினைப் போன்ற 24 மடங்காக அலுவலரின் விருப்பின் பேரில் பெற்றுக் கொடுக்கப்படும் ஓய்வூதியப் பணிக்கொடை பிரதான இடத்தினை வகிக்கின்றது. மேலும் அரச அலுவலரொருவர் ஓய்வு பெற முன்னர் உயிரிழக்கையில், அவர் உயிரிழக்கும் திகதியினை ஓய்வு பெற்ற திகதியாகக் கருத்திற் கொண்டு கணிக்கப்படுகின்றது. மேலும் குறைக்கப்படாத மாதாந்த ஓய்வூதியத்தினைப் போன்ற 24 மடங்கு அல்லது அவரது மாதாந்த ஊதியத்தினைப் போன்ற 12 மடங்கு எனுமிரண்டில் அதிக பெறுமானத்தினைக் கொள்ளும் தொகை குறித்த நபரின் தங்கி வாழ்வோரிடத்தே பெற்றுக் கொடுக்கப்படும் மரணப் பணிக்கொடையும் பிரதான இடத்தினைக் கொள்கின்றது. இதற்கு மேலதிகமாக 120 மாதங்களிலும் குறைந்த சேவைக் காலத்தினைக் கொண்டுள்ள அரச ஊழியர்களிடத்தே வழங்கப்படும் சேவைப் பணிக்கொடை, கருணைக் கொடுப்பனவு மற்றும் 120 மாதங்களிலும் குறைந்த சேவைக் காலத்தினைக் கொண்டிருப்பினும் ஓய்வூதியமின்றி சேவையினை நிறைவு செய்யும் அரச ஊழியர்களிடத்தே வழங்கப்படும் நாளாந்த சேவைப் பணிக்கொடையும், இவற்றிற்கு மேலதிகமாக விசேட நட்டஈடு, கருணைக் கொடுப்பனவு, பொலிஸ் நட்டஈடு போன்றன ஒரு முறை மட்டும் வழங்கப்படும் நலன்களினுள் அடங்குகின்றன. அவற்றிற்கு மேலதிகமாக மாதாந்தம் பெறுகின்ற நலன்களினுள்மாதாந்த ஓய்வூதியம், நட்டஈட்டு ஓய்வூதியம், காயக் கொடுப்பனவுகள், புண்ணியாதாரக் கொடுப்பனவுகள், நற்சேவைக் கொடுப்பனவுகள், விதவைகள் ஓய்வூதியம் மற்றும் தபுதாரர் ஓய்வூதியம், அனாதைகள் ஓய்வூதியம், வலது குறைந்தோர் அனாதைகள் ஓய்வூதியம், ஆயுதப் படைகளுக்கான நலிவுநிலை ஓய்வூதியம், தங்கி வாழ்வோர் கொடுப்பனவு எனும் நலன்கள் சிவில் ஓய்வூதியதாரர்கள், ஆயுதப்படை ஓய்வூதியதாரர்கள் மற்றும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியதாரர்கள் எனும் முப்பிரிவினரையும் பிரதிநிதிப்படுத்தும் வண்ணம் நலன்தாரிகளிடத்தே உரித்தாக்கப்படும். இங்கு சிவில் ஓய்வூதியதாரர்களிடத்தே ஓய்வூதியத்தினை வழங்கும் பொருட்டு 05-02-1934 ஆந் திகதி கொண்ட ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு அடிப்படைச் சட்ட ஆவணமாகக் கொள்ளப்படுகின்றதெனினும், தற்சமயம் நடைமுறைப்படுத்தப்படுவது 05 மே 1972 ஆந் திகதி வெளியிடப்பட்ட அதன் மீளாய்வு செய்யப்பட்ட ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பாகும். விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய நலன்தாரிகளிடத்தே விதவைகள் அனாதைகள் மற்றும் வலது குறைந்தோர் அனாதைள் ஓய்வூதியங்களை வழங்குவதற்கான சட்ட ஆவணமாக அமைவது, ஆங்கிலேய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட 1898 இலக்கம் 01 கொண்ட விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியக் கட்டளைச் சட்டமாகும். இதற்கு மேலதிகமாக ஆயுதப்படைச் சேவை ஓய்வூதியங்களுக்கான 1981 இராணுவப்படை ஓய்வூதியப் பணிக்கொடைப் பிரமாணக் குறிப்பு01-09-1981 முதல் இற்றை வரை நடைமுறைப்படுத்தப்படுவதுடன், 23-12-1970 ஆந் திகதி முதல் அரச நிர்வாக அமைச்சின் கீழ் முகாமை செய்யப்படும் 1942 இலக்கம் 18 கொண்ட கட்டளைச் சட்டத்தின் மூலம் ஓய்வூதிய உரித்தற்ற சில அரச அலுவலர்களுக்கான நிதியியல் அனுகூலங்களைப் பெற்றுக் கொடுக்கும் அரச சேவைகள் சேமலாப நிதியமும் இவற்றிற்கு மேலதிகமாக ஓய்வூதியத் திணைக்களத்தின் கீழ் செயற்படுகின்றது.

இவ்வாறு முறையான மற்றும் அதிஉயர் சமூக பாதுகாப்பு ஆதனமொன்றின் ஆடம்பரமிகு வரலாற்றினைக் கொண்டுள்ள ஓய்வூதியத் திட்டத்தினைச் செயற்படுத்துகையில் ஓய்வூதியத் திணைக்களம் 2013 ஆம் ஆண்டில் மொத்த ஓய்வூதிய வழங்கற் செயற்பாட்டிற்காக 139,445.00 மில்லியன் ரூபாய்களைச் செலவிட்டுள்ளது.

# மக்கள் தொடர்பாடல் பிரிவு

ஓய்வூதியத் திணைக்களத்தினால் நிதமும் செவ்வைப்படுத்தப்படும் தகவல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கும், ஓய்வூதியர்கள் மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களை அறிவூட்டுதல் மற்றும் அவர்களுடன் சிறந்ததோர் தொடர்பினைக் கொண்டு நடாத்துவதற்காகவும் ஓய்வூதியத் திணைக்களத்தின் மக்கள் தொடர்பாடல் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. ஓய்வூதியத் திணைக்களத்திற்கு வருகை தரும் அனைத்து சேவைதாரர்களிடத்திலும் குறித்த சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக அவர்களைக் குறித்த பிரிவுகளிடத்தே அனுப்புதல் மற்றும் குறுந்தொலைபேசி இலக்கம் 1970 ஊடாகத் திணைக்களத்தினை அழைக்கும் சேவைதாரர்களிடத்தே துரிதமாகத் தகவல்களை வழங்கும் சேவையினைப் பராமரித்துச் செல்லுதல் என்பன இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

அவ்வாறே அலுவலக நேரங்களின் பின்னர் கிடைக்கும் அழைப்புக்களைக் கண்காணித்தல் மற்றும் ஓய்வூதியர்களின் சங்கங்களுடன் தொடர்புகளைப் பராமரித்துச் செல்லுதலும் இதன் கடப்பாடுகளுள் அடங்குகின்றன. 2013 ஆம் ஆண்டில் மக்கள் தொடர்பாடல் பிரிவுடன் சேவைதாரர்கள் தொடர்புகளை மேற்கொண்ட விதம் கீழ் காட்டப்படுகின்றது.



# பதிவு செய்தற் பிரிவு

ஓய்வூதிய வழங்கற் செயற்பாட்டின் போது முதலில் தொடர்புறும் பிரிவு இதுவாகும். பூரண செயற்பாட்டினதும் தொடக்கத்தினைக் குறித்த வண்ணம் ஓய்வூதிய வழங்கற் செயற்பாட்டின் நுழைவாயிலாகப் பதிவு செய்தற் பிரிவு கடமையாற்றுகின்றது. இதன் மூலம் ஓய்வூதியர்களிடத்தே அவர்களது எதிர்கால ஓய்வூதிய வழங்கற் செயற்பாட்டிற்குத் தேவையான ஓய்வூதிய இலக்கமொன்றினைப் பெற்றுக் கொடுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் மூலம் ஓய்வூதியர்களுக்கு அவரது ஓய்வு கால வாழ்நாள் பூராவும் இவ்விலக்கத்துடன் தொடர்புறும் வண்ணம் அவர்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.


இப்பிரிவின் மூலம்,

- அனைத்து ஓய்வூதியர்களையும் பதிவு செய்தல்.
- சேவைப் பணிக்கொடைகள் மற்றும் மரணப் பணிக்கொடைகள்
- மீளாய்வுகள் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குதல்


போன்ற விடயங்கள் தொடர்பிலான பதிவுகள் மேற் கொள்ளப்படுகின்றன.

பதிவு செய்தற் பிரிவில் இடம் பெறும் செயற்பாடு தொடர்பிலான 2013 ஆம் ஆண்டின் செயல்திறன் கீழ் வருமாறு அமைகின்றது.

## 2013 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஓய்வூதியர்களின் எண்ணிக்கை




## 2013 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மீளாய்வு விண்ணப்பங்களின் எண்ணிக்கை



## தகவல் தொழில்நுட்பப் பிரிவு

1100 இலும் அதிகமான ஆளணியினர் மற்றும் அனைத்துப் பிரதேச செயலகங்கள், வங்கிகள், தபாலகங்கள், அனைத்து அரச நிறுவனங்கள், ஓய்வூதியர்கள் போன்றே அனைத்து அரச அலுவலர்கள் மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்கள் நேரடியாக அல்லது மறைமுகமாகத் தொடர்புறும் ஓய்வூதியச் செயற்பாட்டினை மிக வினைத்திறன் மிக்கதாக மாற்றியமைக்கும் பொருட்டு அதன் செயற்பாடு, முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்தினை தகவல் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்டு அதனை மேம்படுத்துவதற்கான அத்திவாரத்தினை இடுதல் 2013 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்பப் பிரிவிடத்தே பெற்றுக் கொடுக்கப்பட்ட இலக்காகும். அதன்படி ஒரு புறத்தில் ஓய்வூதிய வழங்கற் செயற்பாட்டினை கணணிமயப்படுத்துவதற்கான செயற்பாடுகள் மற்றும் மறுபுறத்தில் திணைக்களத்தின் முகாமைத்துவச் செயற்பாட்டினை கணணிமயப்படுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புறும் தொழில்நுட்ப, மனிதவள மற்றும் பௌதீக வளங்களின் விருத்திக்கான நடவடிக்கைகளில் தனது கவனத்தினைத் திருப்பியது.


அதன் அடிப்படையில் கீழ் குறிப்பிடப்படும் முக்கிய இலக்குகள் அடையப் பெற்றுள்ளன.


## ஆயுதப்படைச் சேவைகள் ஓய்வூதியப் பிரிவு

10-10-1949 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஓய்வூதியக் குறிப்பின் கீழ் ஆயுதப்படைச் சேவைகளின் நிரந்தரப் படையணிகளது உத்தியோகத்தர்கள், ஏனைய நிலையினருக்கு ஓய்வூதியங்கள் உரித்தாக்கப்படினும், ஆயுதப்படைச் சேவைத் தொண்டர் படையணிகளின் உத்தியோகத்தர்கள்/ஏனைய நிலைகளுக்கு, பெண் அலுவலர்களுக்கு மற்றும் வீராங்கனைகளுக்கும் தற்போது நடைமுறையில் உள்ள 1981 ஆயுதப் படைகளுக்கான ஓய்வூதிய மற்றும் பணிக்கொடைப் பிரமாணக் குறிப்பின் கீழேயே ஓய்வூதிய உரித்து பெற்றுக் கொடுக்கப்பட்டது. இது 01-09-1981 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ஆயுதப்படைச் சேவைகள் பிரிவின் பிரதான கடப்பாடாக அமைவது, முப்படைகளினதும் அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினரது ஓய்வூதியங்கள் தொடர்பிலான அனைத்து நடவடிக்கைகளையும் முகாமை செய்வதன் ஊடாக அவர்களது ஓய்வூதியத்தினைத் தயாரித்தளிக்க உதவுதலாகும். ஆயுதப்படைச் சேவை ஓய்வூதியர்களுக்காகக் கீழ் குறிப்பிடப்படும் ஓய்வூதிய நலன்கள் பலவற்றினையும் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ் ஓய்வூதியங்களை முறையாகக் கணிப்பிட்டுத் தயாரித்தல் மற்றும் மீளாய்வுகளை நடைமுறைப்படுத்தல் இப்பிரிவின் பிரதான கடப்பாடாகும்.

**வருடங்களின் உரித்துக்களை வழங்குதல்.**



## நிர்வாக மற்றும் மனித வள முகாமைத்துவப் பிரிவு


திணைக்களத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்குத் தேவையான மனிதவள முகாமைத்துவம் மற்றும் பௌதீக வளங்களின் பாரமரிப்பு இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

பயிற்சிப் பிரிவின் மூலம் திணைக்களத்தின் மனித வளத்தினை திறன்மிகு வண்ணம் மேம்படுத்துவதற்காகப் பயிற்சிக் கருத்தமர்வுகளை ஒழுங்கு செய்தல் மற்றும் அவற்றிற்கான அலுவலர்களை இணைப்பீடு செய்தல், சேவைதாரர்களுக்குக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.


## வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவு

**மொத்த ஓய்வூதிய வழங்கல்கள் - 2013 சனவரி முதல் திசெம்பர் வரை**

ஓய்வூதியர்களின் பரம்பல்



**வெளிநாடு சென்றுள்ள ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவுகள். (2013 சனவரி முதல் திசெம்பர் வரை)**




| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | இங்கிலாந்து | இந்தியா | கனடா கொன்சியூலர் கா. | கனடா உயர்ஸ்தானிகள் | அ.ஐ. குடியரசு | நியூஸிலாந்து | மக்கள் வங்கி | இலங்கை வங்கி | |

## விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பிரிவு

நிரந்தர ஓய்வூதிய உரித்துள்ள நியமனமொன்றினைப் பெற்றுள்ள ஆண்/பெண் அரச அலுவலரொருவரின் விதவைக்கு, தபுதாரனுக்கு, அனாதைப் பிள்ளைகளுக்கு மற்றும் வலது குறைந்த அனாதைப் பிள்ளைகளுக்கு பொருளாதார ரீதியில் திருப்திகரமானதோர் வாழ்வினைக் கொண்டு நடாத்துவதற்காக விதவைகள், அனாதைகள் சட்டங்களின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளினுள் குறித்த நலன்களைப் பெற்றுக்கொடுத்தல் இப்பிரிவின் கடப்பாடாகும்.

ஆங்கிலேயர்கள் இந்நாட்டினை ஆட்சி செய்த காலப் பகுதியில் அரச சேவைக்காக அளிக்கப்பட்டதோர் அதிவிசேட வரப்பிரசாதம் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத் திட்டமாகும். நூறு வருடங்களிலும் பழமையான இவ் ஓய்வூதியத் திட்டம் அரசினைப் பிரதிநிதித்துவப்படுத்திய வண்ணம் பொது மக்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரச அலுவலர்களுக்கான நலன்களைப் பெற்றுக் கொடுப்பதனைப் போன்றே அவர்களது குடும்பத்தினரையும் பாதுகாக்கும் நோக்கில் 1898 ஆம் ஆண்டில் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. 1898 ஆம் ஆண்டில் அரச சேவையில் உள்ள ஆண் அலுவலர்களுக்கு மட்டும் இத்திட்டத்தின் கீழான நலன்கள் ஆரம்பமாயினும், இந்நாட்டுக் கல்விப் பரம்பலின் மூலம் அரச சேவையில் அதிகளவிலான பெண் அலுவலர்கள் இணைந்து கொண்டமையின் காரணமாக 1983 ஆம் ஆண்டு தபுதாரர்கள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டமும் ஆரம்பிக்கப்படுகின்றது.


பாதுகாப்புமிகு சமூகமொன்றினைக் கட்டியெழுப்பும் மஹிந்த சிந்தனைகள் கொள்கையின்படி தமது வாழ்வினைப் பிள்ளைகளுக்காகவும், நாட்டிற்காகவும் அர்ப்பணித்த சிரேஷ்ட பிரசைகளைப் பாதுகாத்தல் மிகப் பிரதானமானதோர் நோக்கமாகும். சிரேஷ்ட பிரசைகள் உள்ளிட்ட முழுக் குடும்பத்தினரையும் பாதுகாப்பதனை இலக்காகக் கொண்டு, தலைமுறையொன்றின் பெருமிதத்தினை ஏற்படுத்துமுகமானதோர் பாரிய சமூக பாதுகாப்புத் திட்டமாக விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத் திட்டம் நிகழ்காலத்தில் செயற்படுகின்றதென்பதனைக் குறிப்பிடுதல் வேண்டும்.

இன்றைய தினமாகுகையில் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத்தின் மூலமான நலன்களைப் பெறும் தொகையினரை இவ்வளவு என வரையறுத்துக் கூற முடியாதுள்ளது. இதற்காக சம்பளத்திலிருந்து எளிய சதவீதமொன்று அறவிடப்படினும், அதன் மூலம் கிடைக்கும் நலன்கள் மிகப் பாரியவையாகும். அதனை வேறு விதமாக நோக்குகையில் விவாகமாகாது சேவையினை முடிவுறுத்தும் அலுவலர்களுக்குக் கிடைக்கும் சேமிப்புத் தொகையாகும். விவாகமானவராயின் தமது துணைவர், பிள்ளைகளுக்காகத் தம்மையறியாமலேயே பாதுகாப்பு முறையொன்றினை ஏற்படுத்தியதாக அமையும். குழந்தைப் பருவம், பிள்ளைப் பருவத்தினைத் தாண்டிய வண்ணம் வாலிப வயதினை அடைந்ததன் பின்னர் எமது வாழ்வினை விவாகமெனும் ஆபரணத்தினால் அழகுபடுத்திக் கொள்வதன் ஊடாக விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் நலன்கள் அர்த்தமுடையதாகின்றன. இங்கு முன்னுரிமையளிக்கப்படுவது சட்டரீதியான முதல் விவாகத்தின் மனைவிக்கு/ கணவனுக்கு மட்டுமே என்பது விசேட அம்சமாகும். இரண்டாம் விவாகமொன்று இடம் பெற்றிருக்கையில் முதலாவது விவாகம் உயிரிழப்பு அல்லது சட்டரீதியான விவாகரத்து மூலம் முடிவுற்றிருத்தல் வேண்டும். இதற்கு முன்னர் இவ்வாறான சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட வண்ணமிருந்த ஓய்வூதியங்கள் இடைநிறுத்தப்படினும், 16-12-2010 ஆந் திகதி கொண்ட ஓய்வூதியச் சுற்றுநிருபம் 13/2010 இன் படி இரண்டாம் முறை விவாகமாகுகையில் ஓய்வூதியத்தின் 50% இனைப் பெற்றுக் கொடுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

இவ் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் நலன்களைப் பெறும் நபர்களின் படி குறித்த ஓய்வூதியத்தினை அறிமுகப்படுத்துவம் விசேட அம்சமாகும். அரச அலுவலர் உயிரிழந்து அவரது மனைவிக்கு ஊதியம் கிடைத்தல் "விதவைகள் ஓய்வூதியம்" எனவும், பெண் அரச அலுவலர் உயிரிழந்து அவரது கணவருக்கு ஊதியம் கிடைத்தல் "தபுதாரர் ஓய்வூதியம்"எனவும், அரச சேவையில் இருந்த பெற்றோர் உயிரிழந்ததன் பின்னர் அவர்களது தொழிலற்ற, விவாகத்தினை

அடிப்படையாகக் கொள்ளாது, வயது 26 வருடங்களிலும் குறைந்த பிள்ளைகளிடத்தே வழங்கப்படும் ஊதியம் ''அனாதைகள் ஓய்வூதியம்'' எனவும், பிறப்பிலேயே அல்லது வயது 26 வருடங்களாகும் முன்னர் உடலியல் அல்லது உளவியல் ரீதியில் வலது குறைவிற்குட்பட்ட, தமது வாழ்வாதாரத்தினை ஏற்படுத்திக் கொள்ள அவ்வலது குறைவு தடையாகக் காணப்படும் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் ஊதியம் ''வலது குறைந்தோர் அனாதைகள் ஓய்வூதியம்'' எனவும் அழைக்கப்படுகின்றது. தற்சமயமாகுகையில் இரண்டாயிரத்திலும் அதிகமான வலது குறைந்தோர் ஓய்வூதிய வழங்கல்கள் காணப்படுகின்றன என்பதனைக் குறிப்பட்டுச் சொல்ல முடியும். இவ்வாறான நலன்தாரிகளிடத்தே குறித்த நலன்கள் கிடைக்கப் பெறுவது அரச அலுவலரின் மாதாந்த ஊதியத்திலிருந்து தம் பதவியினது தன்மையின் அடிப்படையில் 6% அல்லது 7% பங்களிப்புத் தொகைகளாக அறவிடப்பட்டும் காரணத்தினால் ஆகும். நலன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரச அலுவலரின் சேவைக்காலம் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. இவ் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத்தின் இன்னுமோர் விசேட அம்சம் என்னவெனில் அரச அலுவலரது ஓய்வின் பின்னர் பங்களிப்புப் பணம் அறவிடப்படாமையாகும். ஆதலால் ஓய்வு பெற்றதன் பின்னர் செய்து கொள்ளும் விவாகங்களுக்கு இத்திட்டத்தின் நலன்கள் கிடைக்கப் பெற மாட்டாது.


தலைமுறையொன்றின் பெருமிதத்தினைப் பாதுகாக்கும் ஓய்வூதியத் திணைக்களத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் இப் பாதுகாப்புச் செயற்பாடு 14 இலட்சங்கள் அளவிலான அரச அலுவலர்களின் ''**குடும்பம்**'' எனும் அலகினைப் பாதுகாக்கும் பாரியதோர் செயற்திட்டமாகும். இலங்கையினுள் பாதுகாப்பு மிகு சமூகமொன்றினைக் கட்டியெழுப்புகையில் இத்திட்டம் ஏனைய உலக நாடுகளையும் தாண்டிய வண்ணம் அரச சேவையில் காணப்படும் ஓர் முன்நகர்வு ஆகும்.



**பங்களிப்புப் பணச் சேகரிப்பு மற்றும் முகாமைத்துவம்.**

அரச அலுவலர்களின் ஊதியத்திலிருந்து 6% மற்றும் 7% எனும் விகிதங்களில் அறவிடப்படும் விதவைகள் அனாதைகள் ஒய்வூதியப் பங்களிப்புத் தொகைகள் கீழ் குறிப்பிடப்படும் வண்ணம் சேகரித்துத் திணைக்களத்தின் வருமானக் கணக்குகளைப் பராமரித்துச் செல்லப்படுகின்றன.

| | ரூ. (மில்) |
|---|---|
| மத்திய அரச வருமானம் | 8,874,091,355 |
| மாகாண சபைகளின் வருமானம் | 6,281,194,190 |
| சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் | 15,155,285,545 |



**வலது குறைந்தோர் அனாதைகள் ஓய்வூதியம் வழங்குதல்.**

**"சுகாதார சேவைகள் பணிப்பார் நாயகத்தினால் நியமிக்கப்படும்வைத்திய அதிகாரிகள் மூவர் அடங்கிய ஆய்வுச்சபையொன்றினால்,அனாதைப் பிள்ளையொருவரிற்குத் தமது வாழ்வாதாரத்தினைக் ஏற்படுத்திக் கொள்ள இயலாததோர் உடலியல் அல்லது உளவியல் ரீதியான குறைபாடொன்றினால் பீடிக்கப்பட்டுள்ளார் எனத்தீர்மானிக்கப்படுமிடத்து அவ் அனாதைப் பிள்ளைக்கு வயதினைக் கருத்திற் கொள்ளாது ஆயுட்காலஓய்வூதியமொன்றினைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன".**

| **விடயம்** | வருடத்தினுள் முடிவுறுத்தப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| விதவைகள்/தபுதாரர் கோவைகளைச் செவ்வைப்படுத்துதல். | 31,812 |
| சிவில் மற்றும் உள்ளூராட்சி விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் தொடர்பிலான சிக்கல்களைத் தீர்த்தல் | 1,222 |
| விதவைகள்/தபுதாரர் கோவைகளைப் பிரதேச செயலகங்களிடத்தே அனுப்புதல். | 8,654 |
| வலது குறைந்தோர் ஓய்வூதியக் கொடைகளை வழங்குதல். | 268 |

## கொள்கைகள் பிரிவு

அரச ஓய்வூதியர் சமூகத்தவரிடத்தே ஓய்வூதியத்தினை வழங்கும் பொருட்டுத் தயாரிக்கப்பட்டுள்ள கொள்கை ரீதியிலான விடயங்களை விவரணப்படுத்தல், சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் அவ்வாறு காணப்படும் கொள்கை ரீதியிலான விடயங்களை மீளாய்வு செய்தல் மற்றும் புதிய கொள்கை ரீதியிலான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் என்பன இப்பிரிவின் பிரதான கடப்பாடுகளாகும். மேலும் அரச ஓய்வூதியர்களின் ஓய்வூதியத்தினை அண்ணளவானதோர் நியாயமான மட்டத்தில் பராமரித்துச் செல்வதற்கான பின்னனியினைப் ஏற்படுத்துதலும் பிரதானமானதோர் கடப்பாடு ஆகும்.

**ஆற்றப்படும் கருமங்கள்.**

- சட்டமாக்கப்பட்டுள்ள மீளாய்வுகளுடன் தொடர்புறும் ஓய்வூதியத் திணைக்களச் சுற்றுநிருபங்கள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடுதல்.
- ஓய்வூதிய சமூகத்தவரினால் தனிப்பட்ட ரீதியிலும், அனைத்து அரச நிறுவனங்கள் மட்டத்திலும் முன் வைக்கப்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் தேவையான விளக்கங்கள்/ அறிவுறுத்தல்களை வழங்குதல்.
- மொத்த ஓய்வூதிய வழங்கல் வலையமைப்பினைப் பராமரித்துச் செல்கையில் ஏற்புடையதாகும் அனைத்துச் சட்டதிட்டங்கள், சுற்றுநிருபங்கள், வர்த்தமானி அறிவித்தல்கள் போன்ற ஆவணங்கள் உள்ளடங்கிய தகவற் தொகுதியினைச் செவ்வையாகப் பராமரித்துச் செல்லுதல்.
- சட்ட நடவடிக்கைகளில் பங்கு பற்றுதல்.

ஓய்வூதியர் சமூகத்துடன் சிறந்ததோர் தொடர்பினைப் பேணும் பொருட்டு பல்வேறுபட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2013 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள ஓய்வூதியச் சுற்றுநிருபங்கள்

| | சுற்றுநிருப இலக்கம் | விடயம் |
|---|---|---|
| 01 | 01/2013 | ஆயுதப்படைச் சேவை அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலைகளுக்கான நிலுவை ஓய்வூதியப் பணிக்கொடைகளை வழங்குதல். |
| 02 | 02/2013 | ஓய்வூதியத்திற்காகக் கருத்திற் கொள்ளப்படும் சேவைக்காலத்திற்காக விதவைகள் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புப் பணம் அறவிடுதல். |
| 03 | 03/2013 | ஓய்வூதியச் சுற்றுநிருபம் 13/2010 இன் கீழான விதவைகள் ஓய்வூதியத்தின் 50% இனை வழங்குதல் தொடர்பில் ஊதியத்தினைக் கணிப்பிடுதல். |
| 04 | 10/2011(03) | ஓய்வூதியச் சுற்றுநிருப இலக்கம 10/2011 இன் பிரகாரம் திருத்தப்பட்ட கொடைப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல். |

| | | |
|---|---|---|
| 05 | 04/2013 | ஓய்வூதிய சமூகத்தவரின் பொருளாதார மேம்பாட்டிற்கான கடன் வசதிகளை வழங்குதல் (ஃபான் ஆசியா) |
| 06 | 05/2013 | 2014 ஆம் ஆண்டின் ஓய்வூதிய வழங்கற் திகதிகளைத் தீர்மானித்தல். |
| 07 | 06/2013 | வழங்கப்படாத ஓய்வூதியப் பணிக்கொடைத் தொகைகள்/ மாதாந்த ஓய்வூதியத் தொகைகளை வரவழைத்தல். |

## சட்டப் பிரிவு

ஓய்வூதியத் திணைக்களத்தில் மேலெழும் சட்டரீதியான சிக்கல்களுடன் தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் இப்பிரிவின் கடப்பாடாகும்.

## உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

ஓய்வூதியத் திணைக்களத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்ளும் பொருட்டு மேல் முகாமைத்துவத்திற்கான ஒத்துழைப்பினை வழங்குவதற்காக வருடாந்த மதிப்பீட்டில் உள்ள நிதி ஏற்பாடுகள் பயன்மிகு மற்றும் வினைத்திறன்மிக்க வண்ணம் சட்டதிட்டங்கள், பிரமாணங்களுக்கமைய செலவிடப்படுகின்றதா? என்பதனைப் பரீட்சிப்பதற்காக ஓய்வூதிய வழங்கல்களுடன் தொடர்புறும் அரச நிறுவன வலையமைப்பினைக் கணக்காய்விற்கு உட்படுத்துதல் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நோக்கமாகும்.

**பிரதான கடப்பாடுகள்.**

- ஓய்வூதியத் திணைக்களம் மற்றும் ஓய்வூதியத்துடன் தொடர்புறும் நிறுவனங்களை கணக்காய்விற்கு உட்படுத்திக் கணக்காய்வு வினவல்களை வழங்குதல்.
- மக்கள் முறைப்பாடுகள் தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- விசேட விசாரணைகளை மேற்கொள்ளுதல்.
- ஓய்வூதியர்களது முறையீடுகள்/வேண்டுகோள்கள் தொடர்பில் கருமமாற்றுதல்.
- சிக்கல்கள் கொண்ட கோவைகளுக்குத் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும்/ அவதானிப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- அரச கணக்காய்வுப் பிரிவு/ அரச நிர்வாக அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு என்பனவற்றிலிருந்து கிடைக்கும் கணக்காய்வு வினவல்களுக்கு, ஓய்வூதியத் திணைக்களத்தின் குறித்த பிரிவுகளைக் கலந்தாலோசித்துப் பதில்களை வழங்குதல்.

- ஓய்வூதியக் கணக்காய்வு நடவடிக்கைளுக்காக ஈடுபடுத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட மனித வளங்களை உபயோகிப்பதன் மூலம் பிரதேச செயலகங்களது ஓய்வூதியக் கணக்காய்வுகள் தொடர்பில் அதிக கவனம் செழுத்தப்பட்டது. 144 பிரதேச செயலகங்களை கணக்காய்வு செய்ய எதிர்பார்க்கப்பட்டிருப்பினும், 05 அதிகாரிகள் இடமாற்றம் பெற்றுச் சென்றமையின் காரணமான குறித்த இலக்கினை அடைய முடியவில்லை.

| கணக்காய்வுச் செயற்பாடு | எண்ணிக்கை |
|---|---|
| கணக்காய்விற்கு உட்படுத்திய பிரதேச செயலகங்கள் | 96 |
| ஏனைய காரியாலயங்கள் | 04 |
| விசேட விசாரணைகள் | 14 |
| பதிலளிக்கப்பட்ட கணக்காய்வு வினவல்கள் | 28 |
| நடவடிக்கையெடுக்கப்பட்ட மக்கள் முறைப்பாடுகள் | 294 |
| பரீட்சிக்கப்பட்ட கோவைகள் | 101 |

## அரச சேவைகள் சேமலாப நிதியம்

1942 இலக்கம் 18 கொண்ட அரச சேவைகள் சேமலாப நிதியக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 01-04-1942 ஆந் திகதி மாதாந்த ஊதியம் பெறும் நிரந்தர மற்றும் ஓய்வூதிய உரித்தற்ற அரச அலுவலர்களுக்கான சேவை முடிவு நிதியியல் அனுகூலங்கள் சகிதம் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2003 இலக்கம் 17 கொண்ட திருத்தச் சட்டம் மூலம் நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்ந்தும் விரிவுபடுத்தப்பட்டன. நிதியத்தின் பரிபாலனம் ஐவர் கொண்ட சபையொன்றினால் மேற்கொள்ளப்படுவதுடன், அதன் கட்டமைப்பு கீழ்வருமாறு அமைகின்றது.

1942 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்கம் கொண்ட கட்டளைச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டு 07 தசாப்தங்களிலும் அதிகமான காலப்பகுதி பூரண செயற்பாட்டுடன் காணப்படும் ஓர் நிதியமே அரச சேவைகள் சேமலாப நிதியமாகும். நிரந்தர மற்றும் ஒய்வூதிய உரித்தற்ற அரச அலுவலர்களின் சேவை முடிவு நலன்களை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிதியம், நிகழ் காலமாகுகையில் 226,857 அங்கத்தவர்களுக்கான காப்பீட்டினை வழங்குகின்றது. ஊழியர் பங்களிப்பினைக் கொண்ட சேவை முடிவு அனுகூலத் திட்டமொன்றான இது இலங்கையின் முதற்தர நிதியங்கள் சிலவற்றில் ஒன்றாகும்.

வருடாந்தம் இருந்த அங்கத்தவர்கள் 6000 இலும் அதிகமான தொகையினருக்கு சேவை இறுதி நலன்களைப் பெற்றுக் கொடுக்கும் அரச சேவைகள் சேமலாப நிதியம் பிரதானமாக 04 முறைகளின் கீழ் குறித்த நலன்களைப் பெற்றுக் கொடுக்கின்றது.

**<u>14 ஆம் பிரிவின் கீழ் நலன்களைப் பெற்றுக் கொடுத்தல்.</u>**

இப்பிரிவின் கீழ் நிரந்தர அரச சேவையில் இணையாது, முறையான வண்ணம் சேவை முடிவுறுத்தப்படுகின்ற பங்களிப்பாளர்களுக்குத் தமது ஊதியத்திலிருந்து அறவிடப்பட்ட 8% கட்டாய பங்களிப்பு மற்றும் அரசினால் பெற்றுத் தரப்படும் 12% அரச உதவுத் தொகை எனும் மொத்தமும் அதற்குரிய வட்டித் தொகையும் வழங்கப்படும்.

**<u>20ஆம் பிரிவின் கீழ் நலன்களைப் பெற்றுக் கொடுத்தல்.</u>**


இங்கு ஓய்வூதிய உரித்தற்ற நிலையிலிருந்து, நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய நிலையில் அமர்த்தப்படும் பங்களிப்பாளர்களின் ஊதியத்திலிருந்து அறவிடப்பட்ட 8% கட்டாய பங்களிப்புத் தொகை மற்றும் அதற்குரிய வட்டியும் வழங்கப்படும். அவ்வாறே இச் சேவைக்காலம் ஓய்வூதியக் கணிப்பீட்டிற்காகவும் கவனத்திற் கொள்ளப்படும்.


**<u>16 ஆம் பிரிவின் கீழ் நலன்களைப் பெற்றுக் கொடுத்தல்.</u>**

ஒழுக்காற்றுக் காரணங்களின் கீழ் சேவை முடிவுறுத்தப்படும் பங்களிப்பாளர்களுக்கு அவர்களது ஊதியத்திலிருந்து அறவிடப்பட்ட 8% கட்டாய பங்களிப்புத் தொகை மற்றும் அதற்குரிய வட்டியும் வழங்கப்படும்.

**<u>தவறான கொடுப்பனவுகள்</u>**

நிதியத்திற் பங்களிப்புச் செய்ய முடியாத நபர் ஒருவரினால் ஏதேனுமோர் வகையில் பங்களிப்புத் தொகைகளை வைப்புச் செய்திருக்கையில் எவ்வித வட்டித் தொகைகளும் இன்றி அத்தொகையினை மட்டும் மீளப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.


அங்கத்தவர் எண்ணிக்கையின் அதிகரிப்பு
240000
230000
220000
210000
200000
190000
180000
எண்ணிக்கை
2005
2006
2007
2008
2009
2010
2011
2012
2013
வருடம்
அங்கத்தவர் எண்ணிக்கை


2013 ஆம் ஆண்டின் பங்களிப்புப் பண வரவுகள் மற்றும் மீளளிப்புக்கள் (ரூ. மில்.)
2013 சனவரி முதல் திசெம்பர் வரை
250
200
150
100
50
0
வரவுகள்
மீளளிப்புக்கள்

# கணக்குப் பிரிவு

ஓய்வூதியத் திணைக்களத்தின் நிதியியல் வளங்களை அதியுயர் வினைத்திறன் மற்றும் பயன்மிகு வண்ணம் பராமரித்துச் செல்வதற்கானதோர் முறையான செயற்திட்டத்தினைப் பின்பற்றிய வண்ணம் நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டிலான பங்களிப்பினை வழங்குதல் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

## 01. கணக்குப் பிரிவு

- வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- வினைத்திறன்மிகு நிதியியல் முகாமைத்துவத்திற்குத் தேவையான திட்டங்களை வகுத்தல் மற்றும் அவற்றினை நடைமுறைப்படுத்தல்.
- ஓய்வூதியம் உள்ளிட்ட அனைத்துக் கொடுப்பனவுகளுக்கும் தேவையான கட்டுநிதியினைப் பெற்றுக் கொள்ளுதல்.
- பிரதேச செயலகங்களிடத்தே ஓய்வூதிய வழங்கல்களுக்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் மற்றும் கட்டுநிதியினைப் பெற்றுக் கொடுக்கும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மற்றும் பின் விவரண நடவடிக்கைகள்.
- வருடாந்தப் பொருட் கணக்கெடுப்பு நடவடிக்கைகள்.
- அரச கணக்கீடுகளுடன் தொடர்புறும் திணைக்களத் தரவுகளை மாதாந்தம் திறைசேரியிடத்தே அறிக்கையிடுதல் மற்றும் வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு உள்ளிட்ட அனைத்துக் கணக்குகளையும் சமர்ப்பித்தல்.

**2013 ஆம் ஆண்டின் நிதியியற் தகவல்கள் மற்றும் வளர்ச்சி**

2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீடுகளின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி ஏற்பாடுகளும் திட்டங்களின் அடிப்படையில் பிரிந்து சென்றுள்ள விதம் கீழ்வருமாறு ஆகும்.

| | | |
|---|---|---|
| பொது நிர்வாகம் | ரூ. | 112,503,210.00 |
| ஓய்வூதியத்தினை நடைமுறைப்படுத்துதல் | ரூ. | 145,073,369,597.00 |
| | ரூ. | 145,185,872,807.00 |


மேற்குறித்த நிதி ஏற்பாடுகள் நிதியிடப்படுவது,

| | | |
|---|---|---|
| உள்நாட்டு நிதியங்கள் மூலம் (11) | ரூ. | 120,685,872,807.00 |
| விசேட சட்டச் சேவைகள் | ரூ. | 24,500,000,000.00 |
| | ரூ. | 145,185,872,807.00 |

| | ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் (ரூ. மில்லியன்) | செலவீனங்கள் (ரூ. மில்லியன்) | ஒய்வூதிய நிதி ஏற்பாடுகளின் %ஆக |
|---|---|---|---|
| வலது குறைந்த படை வீரர்களின் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள் | 16,152.0 | 16,151.6 | 99.99 |
| அரச அலுவலர்களின் ஒய்வூதியப் பணிக்கொடைகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 127,654.1 | 122,813.5 | 96.21 |
| அரச சேவைகள் சேமலபாப நிதியத்தின் வெகுமதிக் கொடுப்பனவுகளை வழங்குதல். | 500.00 | 336.10 | 67.00 |

# ஓய்வூதியதாரர்கள் மாவட்ட அடிப்படையில் பிரிந்து சென்றுள்ள விதம் - 2013

| மாவட்டம் | | சிவில் | விதவைகள் அனாதைகள் ஓய்வூதியம் | ஆயுதப் படை | பிரிவேனா மற்றும் தனியார் பாடசாலை ஆசிரியர்கள் | உள்ளூராட்சி | ஏனைய | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | 50763 | 24888 | 7085 | 483 | 1834 | 775 | **85828** |
| 2 | கம்பஹா | 44165 | 23028 | 8611 | 400 | 1274 | 1027 | **78505** |
| 3 | களுத்துறை | 22028 | 8853 | 4302 | 131 | 858 | 752 | **36924** |
| 4 | கண்டி | 27623 | 10134 | 6404 | 372 | 1122 | 1135 | **46790** |
| 5 | மாத்தளை | 6794 | 2765 | 2252 | 22 | 238 | 454 | **12525** |
| 6 | நுவரேலியா | 4692 | 1997 | 821 | 20 | 123 | 500 | **8153** |
| 7 | காலி | 18221 | 7020 | 3745 | 81 | 628 | 1023 | **30718** |
| 8 | மாத்தறை | 13640 | 4324 | 2111 | 266 | 387 | 590 | **21318** |
| 9 | அம்பாந்தோட்டை | 6406 | 2060 | 1343 | 24 | 210 | 111 | **10154** |
| 10 | யாழ்ப்பாணம் | 9269 | 4749 | 68 | 76 | 248 | 306 | **14716** |
| 11 | மன்னார் | 796 | 333 | 0 | 0 | 0 | 0 | **1129** |
| 12 | வவுனியா | 1526 | 847 | 83 | 0 | 39 | 0 | **2495** |
| 13 | முல்லைத்தீவு | 418 | 201 | 0 | 0 | 0 | 0 | **619** |
| 14 | கிளிநொச்சி | 536 | 276 | 5 | 0 | 16 | 0 | **833** |
| 15 | மட்டக்களப்பு | 4199 | 2218 | 202 | 5 | 176 | 113 | **6913** |
| 16 | அம்பாறை | 4178 | 2113 | 1004 | 3 | 89 | 27 | **7414** |
| 17 | திருகோணமலை | 2973 | 1674 | 540 | 82 | 97 | 106 | **5472** |
| 18 | குருணாகலை | 23818 | 10000 | 7899 | 145 | 701 | 2231 | **44794** |
| 19 | புத்தளம் | 6907 | 3509 | 1385 | 37 | 303 | 237 | **12378** |
| 20 | அனுராதபுரம் | 9370 | 5045 | 5978 | 22 | 301 | 573 | **21289** |
| 21 | பொலன்னறுவை | 3817 | 1916 | 1276 | 9 | 37 | 190 | **7245** |
| 22 | பதுளை | 10088 | 4336 | 3524 | 27 | 315 | 64 | **18354** |
| 23 | மொனறாகலை | 3056 | 1457 | 1605 | 106 | 53 | 96 | **6373** |
| 24 | இரத்தினபுரி | 10081 | 3684 | 1584 | 151 | 228 | 271 | **15999** |
| 25 | கேகாலை | 14455 | 5821 | 3397 | 67 | 320 | 701 | **24761** |
| **மொத்தம்** | | **299819** | **133248** | **65224** | **2529** | **9597** | **11282** | **521699** |
| **வெளி நாட்டு ஓய்வூதியம்** | | | | | | | | **5291** |
| **முழு மொத்தம்** | | | | | | | | **526990** |




## ஊடகப் பிரிவு

"திறன்மிக்கதும், பக்கச் சார்பற்றதும் மற்றும் பொறுப்புடன் கூடிய விதத்தில் ஊடகத்தினை உபயோகிப்பதன் மூலம் மேம்படுத்தப்படும் ஒய்வூதியத் திணைக்களத்தின் சட்டநடைமுறைகளுடன் நலன்தாரிகளை அணுகுதல் மட்டுமல்லாது, அவர்களிடத்தே கருணைமிக்கதோர் பார்வையினைச் செழுத்தும் சமூகமொன்றிற்கான நுழைவாயிலைத் தோற்றுவிப்பதற்காக முனைதல் ஓய்வூதியத் திணைக்கள ஊடகப் பிரிவின் கடமையாகும்."

# ஆற்றப்பட்டுள்ள கடப்பாடுகள்

2013 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 08 ஆந் திகதி தேசிய ஓய்வூதியர் தின நிகழ்வுகளை மையப்படுத்தி ஓய்வூதியத் திணைக்களத்தின் ஊடகப்பிரிவு நிறுவப்பட்டதுடன், அங்கே குறித்த நிகழ்வுகளுக்காக அனைத்து ஊடக நிறுவனங்களினதும் ஊடகப் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் விசேடமாக மேற்கொள்ளப்பட்டன. அன்றிலிருந்து நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறுபட்ட சமூகநல நிகழ்வுகள் மற்றும் ஓய்வூதிய வழங்கற் செயற்பாட்டிற்கு அப்பாற் சென்ற பல்வகையான நலன்களைப் பெற்றுக் கொடுக்கும் சந்தர்ப்பங்களில் அவை தொடர்பில் சமூக விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் ஊடக அறிவித்தல்களும் வெளியிடப்பட்டன. மேலும் ஓய்வூதியத் திணைக்களம் மற்றும் அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்படும் ஓய்வூதியம் தொடர்பிலான சுற்றுநிருபங்கள் மற்றும் சட்டதிட்டங்கள் தொடர்பில் ஊடகங்களை அறிவூட்டுவதும் மேற்கொள்ளப்பட்டது.

ஓய்வூதியம் தொடர்பில் பல்வேறுபட்ட விற்பன்னர்களினால் எழுதப்பட்ட ஆக்கங்களைப் நாளிதழ்கள் மூலம் பிரசித்தப்படுத்துதல் மற்றும் நாளிழ்களுக்கு ஓய்வூதியர்களினால் அனுப்பப்படும் சிக்கல்களுக்குப் பதிலளித்தலும் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் 02-12-2013 ஆந் திகதி தேசிய தொலைக்காட்சிச் சேவையின் ஊடாக ஓய்வூதியத் திணைக்களம் தொடர்பிலான 30 நிமிட விவரண நிகழ்ச்சியொன்றினை ஒளிபரப்புதலும் மேற்கொள்ளப்பட்டது.

ஓய்வூதியத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குச் செய்திகள் மற்றும் புகைப்படங்களைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினை செவ்வைப்படுத்துவதற்கான தகவல்களை வழங்குதலும், புகைப்பட மற்றும் படைப்புத் தளங்களைச் செவ்வைப்படுத்துதல் மற்றும் மாதாந்தப் செய்திகள் விவரணத்தினை பராமரித்துச் செல்வதும் ஊடகப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் கருமங்களாகும்.

## சிரேஷ்ட பிரசைகளுக்கான உபகாரம் 2013

அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த இராஜபக்ஷ அவர்களின் மஹிந்த சிந்தனை முன்னோக்குதல்கள் கொள்கைப் பிரகடனத்தினைப் பின்பற்றிய வண்ணம் இலங்கை வாழ ஓய்வூதியர் சமூகத்தவரிடத்தே கௌரவமிகு உபகாரத்தினை வழங்குவதனை முதநிலைப்படுத்தி 2008 அக்டோபர் மாதம் 08 திகதி தேசிய ஓய்வூதியர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் படி 08-10-2013 ஆந் திகதி தேசிய ஒய்வூதியர் தினத்தின் நிமித்தம் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் வழிகாட்டலின் அடிப்படையில் திணைக்களத்தில் பல்வேறு விசேட நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்பட்டன. ஓய்வூதியத்திற்கு அப்பாற் சென்ற சமூகக் கடமையொன்றின் ஆரம்பத்தினைக் குறித்த வண்ணம் ஓய்வூதியர்கள் அரச சேவை மூலம் பெற்ற அனுபவங்கள் மற்றும் அளப்பரிய அறிவினை மீளவும் நாட்டின் பொருளாதாரத்தில் பங்குறச் செய்தல், அவர்களைச் சமூகவியல் ரீதியில் வலுப்பெறச் செய்தல் போன்ற விடயங்களின் காள்கோளாக அன்றைய தினம் செயற்படுத்தப்பட்ட நிகழ்வுகளுள் சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரனையின் கீழ் நடாத்தப்பட்ட கண் ஆய்வு மையம் மற்றும் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்ச்சி, லங்கா ஹொஸ்பிட்டல் அனுசரனையுடன் நடாத்தப்பட்ட மருத்துவ ஆய்வு மையம்,''மிஹின் லங்கா'' நிறுவனத்தின் அனுசரனையுடன் தம்பதிவ







யாத்திரைகளுக்கான விமானப் பயணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட லொத்தர் சீட்டிழுப்பு நிகழ்வு என்பன முதற் தரமானவையாகும். அவ்வாறே ஓய்வூதியர்ச் சங்கங்களைப் பதிவு செய்தலுடன் தொடர்புறும் வரைபினை விடயதான அமைச்சரிடத்தே கையளித்தல், ஒய்வூதியர்களின் ஆக்கங்களைக் காட்சிப்படுத்துவதற்கு மற்றும் அவற்றினை விற்பனை செய்தவற்கான சந்தர்ப்பத்தினைப் பெற்றுக் கொடுத்தல், ''கார்கில்ஸ் ∴புட் சிட்டி'' நிறுவனத்தினால் ஒய்வூதியர்களுக்காக வேண்டி வழங்கப்படும் ''கார்கில்ஸ் கருசறு வெகுமதி அட்டையினை'' வெளியிடுதல் போன்ற நிகழ்ச்சிகளும் செயற்படுத்தப்பட்டன. ஓய்வூதியத்திலும் அப்பாற் சென்ற சமூகக் கடமையொன்றின் ஆரம்பமாக மொத்த ஓய்வூதியர் சமூகத்திற்கும் நிதியியல் வலுவினைப் பெற்றுக்கொடுத்து அவர்களது பொருளாதார நிலையினை உறுதிப்படுத்தும் நோக்கில் நிதி நிறுவனங்களுடன் இணைந்து (அரச மற்றும் தனியார் வங்கிகள்) கடன் வசதித் திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன் அடிப்படை நோக்கம் ஓய்வூதிய சமூகத்தவரின் பொருளாதார நிலையினை நாட்டின் பொருளாதாரத்துடன் உயிரோட்டமிகு வண்ணம் கலந்துறச் செய்வதன் மூலம் அவர்களது வாழ்க்கை நிலையினை மிகத் திறம்பட உறுதிப்படுத்துதல் ஆகும். இச் செயற்பாட்டினை வெற்றிகரமாக்கும் பொருட்டு ஓய்வூதியர்களிடத்தே கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் திட்டமொன்றும் பல்வேறுபட்ட நிதி நிறுவனங்கள் (அரச மற்றும் தனியார் வங்கிகள்) மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



டீ.ஜீ.எஸ்.ஏ.-1

# ஒதுக்கீட்டுக் கணக்கு 2013

செலவினத் தலைப்பு இல: 253 திணைக்களத்தின் பெயர் : ஓய்வூதியத் திணைக்களம்

| வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்ட இல. | வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஓ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) | பக்க இல. (தொடர்புடைய மாதிரி டீ.ஜீ.எஸ்.ஏ-2 இன் பிரகாரம்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| | **மீண்டுவரும்** | | | | | | | |
| 1 | தொழில்முறைச் செயற்பாடுகள் | 143,746,100,000 | 1,407,872,807 | -17,378,210 | 145,136,594,597 | 139,768,304,968 | 5,368,289,629 | டீ.ஜீ.எஸ்.ஏ 3 |
| | உப மொத்தம் (மீண்டுவரும்) | **143,746,100,000** | **1,407,872,807** | **-17,378,210** | **145,136,594,597** | **139,768,304,968** | **5,368,289,629** | |
| | **மூலதனம்** | | | | | | | |
| 1 | தொழில்முறைச் செயற்பாடுகள் | 31,900,000 | 0 | 17,378,210 | 49,278,210 | 40,756,307 | 8,521,903 | டீ.ஜீ.எஸ்.ஏ 4 |
| | உப மொத்தம் (மூலதனம்) | **31,900,000** | **0** | **17,378,210** | **49,278,210** | **40,756,307** | **8,521,903** | |
| | முழு மொத்தம் | **143,778,000,000** | **1,407,872,807** | **0** | **145,185,872,807** | **139,809,061,275** | **5,376,811,532** | |

பக்க இலக்கம் 02 முதல் 31 வரை டீ.ஜீ.எஸ்.ஏ 2 முதல் டீ.ஜீ.எஸ்.ஏ 10 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புக்கள் இலக்கம் 32 முதல் 42 உள்ளடக்கிய ஏனைய விபரங்களும் இந்த ஒதுக்கீட்டுக் கணக்கிலேயே அடங்கிய பகுதியாகும். அதனால் மேலேயுள்ள கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விபரங்கள், அது தொடர்பான கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புக்களுக்கு இணங்கியதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதையும், திறைசேரிக் கணக்குப் புத்தகங்களுடன் தொடர்புடைய கணக்குகள் ஒப்புநோக்கப்பட்டுள்ளது என்பதையும், அவை சரியென உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலர்
பெயர்:
பதவி :
திகதி : -03-2014

கணக்குக் கொடுக்கும் அலுவலர்
பெயர்:
பதவி :
திகதி : -03-2014

பிரதான கணக்காளர்
பெயர் :
திகதி : -03-2014

# நிகழ்ச்சித் திட்டங்களின் பிரகாரம் ஒதுக்கீட்டுக் கணக்கு 2013

செலவினத் தலைப்பு இல: 253 திணைக்களத்தின் பெயர் : ஓய்வூதியத் திணைக்களம்

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 01- தொழில்முறைச் செயற்பாடுகள்

## மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினத்தின் சுருக்கம்

| செலவினத்தின் தன்மை (டீ.ஜீ.எஸ்.ஏ.மாதிரிப் படிவத்துடன்) | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஓ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) | பக்க இல. (தொடர்புடைய மாதிரி டீ.ஜீ.எஸ்.ஏ.-2 இன் பிரகாரம்) |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| (அ) மீண்டுவரும் (டீ.ஜீ.எஸ்.ஏ. 3) | 143,746,100,000 | 1,407,872,807 | -17,378,210 | 145,136,594,597 | 139,768,304,968 | 5,368,289,629 | (டீ.ஜீ.எஸ்.ஏ. 3) |
| (ஆ) மூலதனம் (டீ.ஜீ.எஸ்.ஏ.4) | 31,900,000 | 0 | 17,378,210 | 49,278,210 | 40,756,307 | 8,521,903 | (டீ.ஜீ.எஸ்.ஏ. 4) |
| **மொத்தம்** | **143,778,000,000** | **1,407,872,807** | **0** | **145,185,872,807** | **139,809,061,275** | **5,376,811,532** | |

பிரதான கணக்காளர்

திகதி : -03-2014

# கருத்திட்டத்தின் பிரகாரம் மீண்டுவரும் செலவினம்

**செலவினத் தலைப்பு இல: 253 திணைக்களத்தின் பெயர் : ஓய்வூதியத் திணைக்களம்**

**நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 01- தொழில்முறைச் செயற்பாடுகள்**

| கருத்திட்ட இலக்கம் / பெயர், ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் சகல கருத்திட்டங்களுக்காகவுமான ஏனைய செலவினம் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஓ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| <u>பொது நிர்வாகம் மற்றும் நிலையச் சேவைகள்</u> | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 31,300,000 | 0 | -2,500,000 | 28,800,000 | 28,018,955 | 781,045 |
| ஏனைய செலவினம் | 51,275,000 | 0 | -5,500,000 | 45,775,000 | 42,613,277 | 3,161,723 |
| **உப மொத்தம்** | **82,575,000** | **0** | **-8,000,000** | **74,575,000** | **70,632,232** | **3,942,768** |
| <u>ஓய்வூதியத்தினை நடைமுறைப்படுத்துதல்</u> | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 201,000,000 | 0 | 25,000,000 | 226,000,000 | 224,861,513 | 1,138,487 |
| ஏனைய செலவினம் | 143,462,525,000 | 1,407,872,807 | -34,378,210 | 144,836,019,597 | 139,472,811,223 | 5,363,208,374 |
| **உப மொத்தம்** | **143,663,525,000** | **1,407,872,807** | **-9,378,210** | **145,062,019,597** | **139,697,672,736** | **5,364,346,861** |
| **முழு மொத்தம்** | **143,746,100,000** | **1,407,872,807** | **-17,378,210** | **145,136,594,597** | **139,768,304,968** | **5,368,289,629** |

பிரதான கணக்காளர்

திகதி : -03-2014

# கருத்திட்டத்தின் பிரகாரம் மூலதனச் செலவினம்

செலவினத் தலைப்பு இல: 253 திணைக்களத்தின் பெயர் : ஓய்வூதியத் திணைக்களம்

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 01- தொழில்முறைச் செயற்பாடுகள்

| செலவு விடய இல. | விடய இல. | நிதியிடல் (குறியீட்டு இல.) | விடயத்தின் விபரம் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) நி. ஓ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள், குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2) | (4) மொத்தச் செலவினம் | (5) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (3-4) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | | 01. பொது நிர்வாகம் மற்றும் நிலையச் சேவைகள் | | | | | |
| | | | **மூலதனச் சொத்துக்கள் மற்றும் பயிற்சி மேம்பாடுகள்** | | | | | |
| 2001 | | 11 | கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் | 6,500,000 | 8,278,210 | 14,778,210 | 14,776,008 | 2,202 |
| 2002 | | 11 | பொறி மற்றும் பொறித் தொகுதிகள் | 1,500,000 | 0 | 1,500,000 | 909,115 | 590,885 |
| 2003 | | 11 | வாகனங்கள் | 1,200,000 | 0 | 1,200,000 | 0 | 1,200,000 |
| | | | **மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு** | | | | | |
| 2102 | | 11 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1,750,000 | 2,100,000 | 3,850,000 | 3,467,031 | 382,969 |
| 2103 | | 11 | பொறி மற்றும் பொறித் தொகுதிகள் | 9,000,000 | 7,000,000 | 16,000,000 | 14,763,431 | 1,236,569 |
| | | | **மனித வள அபிவிருத்தி** | | | | | |
| 2401 | | 11 | அலுவலர் குழாமின் பயிற்சிகள் | 600,000 | 0 | 600,000 | 0 | 600,000 |
| | | | | **20,550,000** | **17,378,210** | **37,928,210** | **33,915,585** | **4,012,625** |
| | | | 02. ஓய்வூதியத்தினை நடைமுறைப்படுத்துதல் | | | | | |
| | | | **மூலதனச் சொத்துக்கள் மற்றும் பயிற்சி மேம்பாடுகள்** | | | | | |
| 2002 | | 11 | பொறி மற்றும் பொறித் தொகுதிகள் | 750,000 | **0** | 750,000 | 41,200 | 708,800 |
| | | | **மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு** | | | | | |
| 2102 | | 11 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 2,500,000 | 0 | 2,500,000 | 2,482,208 | 17,792 |
| 2104 | | 11 | பொறி மற்றும் பொறித் தொகுதிகள் | 7,500,000 | **0** | 7,500,000 | 3,808,314 | 3,691,686 |
| | | | **மனித வள அபிவிருத்தி** | | | | | |
| 2401 | | 11 | அலுவலர் குழாமின் பயிற்சிகள் | 600,000 | 0 | 600,000 | 509,000 | 91,000 |
| | | | | **11,350,000** | **0** | **11,350,000** | **6,840,722** | **4,509,278** |
| | | | | **31,900,000** | **17,378,210** | **49,278,210** | **40,756,307** | **8,521,903** |

பிரதான கணக்காளர்

திகதி : -03-2014

# நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் செலவினத்தின் நிதியிடலின் சுருக்கம்

**திணைக்களத்தின் பெயர்: ஓய்வூதியத் திணைக்களம்**
**செலவினத் தலைப்பு இல:** 253

| நிதியிடல் | | நிகழ்ச்சித் திட்டம் 01* | | நிகழ்ச்சித் திட்டம் 02* | | முழு மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீடு | குறியீட்டு விபரம் | தேறிய ஏற்பாடு ** 1 | உண்மைச் செலவினம் 2 | தேறிய ஏற்பாடு ** 3 | உண்மைச் செலவினம் 4 | தேறிய ஏற்பாடு** 5 | உண்மைச் செலவினம் 6 | செலவினம் *** சதவீதம் (6÷5)X100 |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| 11 | உள்நாட்டு நிதியம் | 120,685,872,807 | 120,662,015,511 | 120,685,872,807 | 120,662,015,511 | 100 | | |
| 12 | வெளிநாட்டுக் கடன் | | | | | | | |
| 13 | வெளிநாட்டு உதவி | | | | | | | |
| 14 | மீள்நிரப்பப்படுகின்ற வெளிநாட்டுக் கடன் | | | | | | | |
| 15 | மீள்நிரப்பப்படுகின்ற வெளிநாட்டு உதவி | | | | | | | |
| 16 | எதிர்த்தரப்பு நிதியம் | | | | | | | |
| 17 | வெளிநாட்டு நிதியிடல் சார்ந்தஉள்நாட்டுச் செலவு | | | | | | | |
| 21 | விசேட சட்டச் சேவை | 24,500,000,000 | 19,147,045,764 | 24,500,000,000 | 19,147,045,764 | 78 | | |
| | **மொத்தம்** | **145,185,872,807** | **139,809,061,275** | **145,185,872,807** | **139,809,061,275** | **96** | | |

பிரதான கணக்காளர்
திகதி : -03-2014

# ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்தினதும் கருத்திட்டத்தின் பிரகாரம் செலவினத்தை நிதியிடல்

**(நிகழ்ச்சித் திட்டத்தினது கருத்திட்டத்தின் பிரகாரம் மீண்டெழும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினங்களின் நிதியிடல்)**

**திணைக்களத்தின் பெயர்: ஓய்வூதியத் திணைக்களம்**
**செலவினத் தலைப்பு இல: 253**

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் :

| நிதியிடல் | | கருத்திட்டம் 1 | | கருத்திட்டம் 2 | | நிகழ்ச்சித் திட்டத்தின மொத்தம் / பக்கங்களின் மொத்தம்* | |
|---|---|---|---|---|---|---|---|
| குறியீடு | குறியீட்டு விபரம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 11 | உள்நாட்டு நிதியம் | 112,503,210 | 104,547,817 | 120,573,369,597 | 120,557,467,694 | 120,685,872,807 | 120,662,015,511 |
| 12 | வெளிநாட்டுக் கடன் | | | | | | |
| 13 | வெளிநாட்டு உதவி | | | | | | |
| 14 | மீள்நிரப்பப்படுகின்ற வெளிநாட்டுக் கடன் | | | | | | |
| 15 | மீள்நிரப்பப்படுகின்ற வெளிநாட்டு உதவி | | | | | | |
| 16 | எதிர்த்தரப்பு நிதியம் | | | | | | |
| 17 | வெளிநாட்டு நிதியிடல் சார்ந்தஉள்நாட்டுச் செலவு | | | | | | |
| 21 | விசேட சட்டச் சேவை | 0 | 0 | 24,500,000,000 | 19,147,045,764 | 24,500,000,000 | 19,147,045,764 |
| | **மொத்தம்** | **112,503,210** | **104,547,817** | **145,073,369,597** | **139,704,513,458** | **145,185,872,807** | **139,809,061,275** |

பிரதான கணக்காளர்
திகதி : -03-2014

## முற்பணக் கணக்கு மற்றும் வைப்புக் கணக்குகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் சுருக்கம் - 2013

**திணைக்களத்தின் பெயர்: ஓய்வூதியத் திணைக்களம்**
**செலவினத் தலைப்பு இல: 253**

| முற்பண / வைப்புக் கணக்குகளின் பெயர் | கணக்கு இலக்கம்* | திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் | | | | திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் 2013/12/31 திகதியன்று மீதி |
|---|---|---|---|---|---|---|
| | | 2013/01/01 திகதியன்று ஆரம்ப மீதி | வருடத்தினுள் பற்று வைத்தல் | வருடத்தினுள் வரவு வைத்தல் | 2013/12/31 திகதியன்று இறுதி மீதி | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| I. அரசாங்க அலுவலர்களின் முற்பணம் | 25301 | 81,268,629.51 | 35,565,722.00 | 24,851,003.91 | 91,983,347.60 | 91,988,143.60 |
| II. ஏனைய முற்பணங்கள் | | | | | | |
| III நானாவித முற்பணங்கள் | | | | | | |
| IV வைப்புக்கள் | | | | | | |
| (i) பொது வைப்புக்கள் | 6000/0/0/15/133 | 12,708,046.02 | 21,885,626.03 | 18,642,006.90 | 9,464,426.89 | 9,464,426.89 |
| (ii) ஏனைய வைப்புக்கள் | | | | | | |

**நி.ஒ. 506 (2) இன் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட முற்பணக் கணக்குகளினதும் வைப்புக் கணக்குகளினதும் இறுதி மீதியை தனியாள் கணக்குகள் தொடர்பான பட்டியலுடன் ஒப்பிட்டு, அந்த இணக்கக் கூற்றுக்களை கணக்காய்வாளர் அதிபதிக்கு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறேன் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.**

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
முதலெழுத்துக்களுடன் பெயர்
திகதி :